**பிரதம செயலாளர் செயலகம், வட மாகாண சபை**

ප්‍රධාන ලේකම් කාර්යාලය- උතුරු පළාත් සභාව

Chief Secretary's Secretariat, Northern Provincial Council

**கன்னியா வீதி, வரோதயநகர், திருக்கோணமலை**

කන්නියා පාර, වරෝතයනගර්, ත්‍රිකුණාමලය.

Website: www.np.gov.lk Kanniya Road, Varothayanagar, Trincomalee. e-mail:npcs@sltnet.lk


| | | |
|---|---|---|
| எனது இல. / මගේ අංකය / My No. NP/09/Vehi/2008 | உமது இல. / ඔබේ අංකය / Your No. | திகதி / දිනය / Date. 14.03.2008 |

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

**மாகாணத் திறைசேரி சுற்றுநிருபம் இல :- PT/09/2008**

**<u>வாகனங்களுக்கான எரிபொருள் பாவனையும் கட்டுப்பாடும்</u>**

இது சம்பந்தமாக பொது நிர்வாக சுற்றுநிருபம் 11.:2006 இன் மீதும் மாகாண திறைசேரி சுற்றுநிருபம் 19.:2007 இன் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. எரிபொருளுக்கான செலவினம் நாளுக்குநாள் கூடிக்கொண்டு செல்வது யாவரும் அறிந்ததே. ஆனால் ஒதுக்கப்படும் தொகையானது அதே மட்டத்தில் பேணவேண்டிய இக்கட்டான நிலையில் அமைச்சுக்கள் திணைக்களங்கள் இருக்கின்றன. எனவே எரிபொருள் பாவனையை கட்டப்படுத்த வேண்டியது மிக மிக அவசியமானதாகும். கூடியவரை பிரயாணம் செய்யுமுன் தேவைகள் யாவற்றையும் ஒருமுகப்படுத்தி அப்பிரயாணத்தை மேற்கொள்வது அவசியமானதாகும்.

3. வாகனங்களுக்கு எரிபொருள் கட்டணம் வழங்கும் போது வாகன ஓட்டப் புத்தகம் சமப்படுத்தப்பட்டிருப்பதை நிர்வாக உத்தியோகத்தர் தனிப்பட்ட முறையில் உறுதிப்படுத்துவது மிக அவசியமானதாகும். அத்துடன் கோரப்படும் தொகையை எரிபொருள் கட்டளையில் பதியாது எரிபொருள் நிரப்பும் பொழுது உண்மையாக நிரப்பிய தொகையை எரிபொருள் நிலையத்தில் வைத்துப் பதிவது அவசியம். அதை வாகனத்துடன் எரிபொருள் நிரப்புவதற்காக செல்லும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் உறுதிப்படுத்திப் பதிதல் அவசியம். மேலதிகமாக காணப்படும் தொகை உடனுக்குடன் ஓட்டப்புத்தகத்தில் பதிந்து ஏற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. சோர்வு ஏற்பட்டால் உரிய ஊழியரிடமிருந்து, குறிப்பிட்ட மாதச் சம்பளத்திலிருந்து அத்தொகையை அறிவிடுதல் அவசீயம். மேலதிகம் ஏற்படும் போது அதை வாகன ஓட்டப் புத்தகத்தில் பதிந்து காட்டுதல் அவசியம்.

எனவே, எரிபொருள் நிரப்ப எரிபொருள் நிலையத்திற்கு <u>ஒரு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் வாகனத்துடன் செல்வதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்</u>. இந் நடைமுறை உடனடியாக செயற்படும் வண்ணம் கடைப்பிடித்தல் வேண்டும்.

சி.ரங்கராஜா
பிரதம செயலாளர்

**பிரதி:-** 1. கௌரவ ஆளுனரின் செயலாளர் - வ.மா
2. கணக்காய்வாளர் நாயகம்
3. பணிப்பாளர், மாகாணக்கணக்காய்வு - வ.மா
} தகவலுக்காக